பக்கங்கள் 12+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 12 வெள்ளிக்கிழமை 27.12.2024 | அதிர்வு 148

## 3 மாத ஆண் குழந்தை காய்ச்சலால் மரணம்

### யாழ்ப்பாணத்தில் சோகம்



யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக பிறந்து மூன்று மாதங்களே நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. 03▸

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ஊடகர் தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல்: குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்!

### இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம்

சுயாதீன ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் குறித்து நீதியான விசாரணைகள் இடம்பெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் பொலிஸ்மா அதிபருக்கு இன்று கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"கிளிநொச்சி மாவட்ட சுயாதீன ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வன் மீது கிளிநொச்சி நகரில் தாக்குதல் நடத்தி 03▸



# தொலைநோக்குச் சிந்தனை கொண்ட சர்வதேச தலைவரே மன்மோகன் சிங்

### இரங்கல் செய்தியில் அநுரகுமார தெரிவிப்பு



தொலைநோக்குக் கொண்ட தலைவரான கலாநிதி மன்மோகன் சிங்கின் வழிகாட்டல் இந்தியாவுக்குள் மாத்திரம் மட்டுப்படவில்லை என்று இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 02▸



### வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த

## பொலிஸ் உத்தியோகத்தர் டிப்பர் மோதி உயிரிழப்பு!



வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் டிப்பர் மோதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ஹபரணையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வீதியில் ஓடிக்கொண்டிருந்த டிப்பர் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது மோதியுள்ளது. இதன்போது, பொலிஸ் உத்தியோகத்தர் டிப்பருடன் முன்னோக்கி இழுத்துச் செல்லப்பட்டு, முன்னால் சென்ற லொறி மற்றும் காருடன் மோதி பலத்த 03▸

### யாழில் இருந்து சென்ற

## பஸ்ஸின் சில்லு உடைந்து விபத்து



யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கி இன்று வெள்ளிக்கிழமை சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் இயக்கச்சி இராணுவ முகாம் முன்பாக விபத்துக்குள்ளாகியது. 03▸

# நேர்மையில் உறுதியாக இருப்பவர்களுக்கு எப்போதோ அதற்குரிய வெகுமதி கிடைக்கும்

## திருவாகரனின் சேவைநயப்பு விழாவில் ஆளுநர் தெரிவிப்பு







நேர்மையில் உறுதியாக இருப்பவர்களுக்கு எப்போதோ அதற்குரிய வெகுமதி – உரிய இடம் கிடைக்கும் எனக் குறிப்பிட்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், திருவாகரன் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலராக பணியாற்றிய காலம் பொற்காலம் எனப் பாராட்டினார்.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளராக இருந்த சிவகுருநாதன் திருவாகரனின் மணி விழாவும் சேவைநயப்பும் நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர், திருவாகரனைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

ஆளுநர் தனது உரையில், சி.திருவாகரன், தற்போதைய பிரதம செயலர் இ.இளங்கோவன், பொதுச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் தான் உள்ளிட்ட 4 பேரும் இலங்கை நிர்வாக சேவைக்கு ஒரே காலத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரே அணியினர் என்பதை நினைவுகூர்ந்ததுடன் 1991 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமது முதல் நியமனங்கள் எவ்வாறிருந்தன என்பதையும் குறிப்பிட்டார்.

அன்றைய கடினமான காலத்தில் எவ்வாறு பணியாற்றினோம் என்பதையும் குறிப்பிட்டதுடன், திருவாகரனின் தந்தையாரும் நேர்மையான ஒருவர் எனவும், அவ்வாறு நேர்மையாக இருந்தமையால் பதவி உயர்வுகள் கூட அவருக்கு மறுக்கப்பட்டன என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவி என்பது மிக முக்கியமானது என்பதுடன் பரீட்சை வினாத்தாள்களின் இரகசியத்தை பேணுகின்ற இந்தப் பதவியில் திருவாகரன் மிகத் திறம்பட பணியாற்றியிருந்தார் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தவறான விடயங்களைச் செய்யுமாறு அழுத்தங்கள் திருவாகரனுக்குப் பிரயோகிக்கப்பட்டமையால் வடக்கு மாகாணத்திலிருந்து அவர் கடந்த காலங்களில் இடமாற்றம் பெற்று கொழும்புக்குச் சென்றமையை சுட்டிக்காட்டிய ஆளுநர், திருவாகரன் தனது பதவிக் காலத்தில் ஒருபோதும் இவ்வாறான அழுத்தங்களுக்கோ மற்றையவர்களின் செல்வாக்குக்கு இடம்கொடுத்த ஒருவரும் அல்ல என்றும் தெரிவித்தார்.

அவரை எனது நண்பன் என்று சொல்வதில் பெருமிதம் கொள்வதாகவும் ஆளுநர் கூறினார்.

திருவாகரன் முதல் நியமனம் பெற்ற மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்) மக்கள் இன்றும் அவரது சேவையை மறக்காமல் பாராட்டுவதென்பது அவரது ஒட்டுமொத்த சேவைக்கும் கிடைத்த அங்கீகாரம் என்றும் ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலராகப் பதவியேற்கவுள்ள பொ.குகநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

திருவாகரனது சேவையைப் பாராட்டி நூலும், ஒலிநாடாவும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தொலைநோக்கு...

இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ருவிட்டர் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

“நான் எனது சார்பிலும், இலங்கை மக்கள் சார்பிலும் இந்தியக் குடியரசுக்கும், கலாநிதி. மன்மோகன் சிங்கின் குடும்பத்தாருக்கும், உலகெங்கிலும் அவர் மீதான பற்றை வெளிப்படுத்தும் எண்ணற்றவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கின்றேன்.

தொலைநோக்குக் கொண்ட தலைவரான கலாநிதி மன்மோகன் சிங்கின் வழிகாட்டல் இந்தியாவுக்குள் மாத்திரம் மட்டுப்படவில்லை. 2004 முதல் 2014 வரை இந்தியாவின் பிரதமராக அவர் செயற்படுத்திய கல்வி உரிமைச் சட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய கிராமிய வேலைவாய்ப்பு செயற்றிட்டம் போன்ற மாற்றத்துக்கான திட்டங்கள் என்பன சமத்துவம், தலைமைத்துவம் தொடர்பிலான அவரது உறுதியான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றன.

சர்வதேச ஒத்துழைப்புக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய கலாநிதி மன்மோகன் சிங், நீண்டகால கூட்டுறவு கூட்டணிகளை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் பி.ஆர்.ஐ.சி.எஸ். போன்ற அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இந்தியா, அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் போன்ற ஒப்பந்தங்கள் மூலம் அவரது சிறந்த இராஜதந்திரம் தெரிகின்றது. அவரது தன்னடக்கம், அறிவாற்றல் மற்றும் அரச சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியன நிச்சயமாக எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நிலையான முன்மாதிரியாகவும் ஊக்குவிப்பாகவும் அமையும். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும்!” – என்றுள்ளது.

# பாத்திரம் கழுவச் சென்ற பெண் முதலை தாக்கிப் பரிதாபச் சாவு!



களு கங்கையில் பாத்திரம் கழுவச் சென்ற பெண் ஒருவர் முதலை தாக்கி உயிரிழந்துள்ளார் என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் களுத்துறை, தொடங்கொட, கொஹொலான வடக்கு பகுதியில் வசிக்கும் 51 வயதுடைய மல்லிகா நிலந்தி மங்கலிகா என்ற திருமணமான பெண்ணே முதலை தாக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் நேற்று கொஹொலன பிரதேசத்தில் தனது வீட்டின் எல்லையில் உள்ள களு கங்கையில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த போது முதலை ஒன்று பிடித்து இழுத்துச் சென்றது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அப்போது, அந்தப் பெண் கூக்குரலிட்டதையடுத்து அவரது கணவர் உள்ளிட்ட பலர் உடனடியாக ஆற்றுக்குள் விரைந்து சென்ற போதிலும், முதலை நீருக்கு அடியில் சென்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் களுத்துறை கடற்படை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்களுடன் இணைந்து பொலிஸார், பிரதேசவாசிகள் படகு ஒன்றில் தேடுதல் மேற்கொண்டபோது, அந்தப் பெண்ணை முதலை வாயில் இருந்து விடுவித்துள்ளது.

ஆயினும் மேற்படி பெண் ஏற்கனவே இறந்துவிட்டார் என்று அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தோர் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் பிரேத பரிசோதனை களுத்துறை நாகொட பொது வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஊடகர் தமிழ்ச்செல்வன்...

வானில் கடத்தும் முயற்சியொன்று 26.12.2024 அன்று மாலை இடம் பெற்றுள்ளதாக அவர் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

கடமை நேரத்தின் பின்னர் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த தமிழ்ச்செல்வனைப் பின்தொடர்ந்து வந்திருந்த வான் யாழ்ப்பாணம் – கண்டி வீதியில் வழிமறித்து இவ்வாறு கடத்தலை முன்னெடுக்க முற்பட்டுள்ளது. கடத்தல்காரர்களிடமிருந்து தப்பித்துச் செல்ல முயன்ற தமிழ்ச்செல்வன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயங்களுடன் அவர் கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் முன்னெடுக்கப்படும் சுற்றுச்சூழல் அழிப்பு மற்றும் பரவி வரும் போதைபொருள் கடத்தல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பல்வேறு செய்திகளை வெளிப்படுத்தியமை மற்றும் தகவல் அறியும் சட்டமூலத்தில் தகவல்களைப் பெற்று பல ஊழல்களை வெளிப்படுத்த முயன்றமையின் காரணமாக தாம் இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளப்பட்டுள்ளார் என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் முயற்சியை இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. தம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட வானைச் செலுத்தி வந்த சாரதியை அடையாளம் காட்ட முடியும் என்று தமிழ்ச்செல்வன் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் உரிய விசாரணையை மேற்கொண்டு அவருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதுடன், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தமது பணியை முன்னெடுக்கும் சூழ்நிலையை வடக்கு மாகாணத்தின் மாவட்டங்களில் ஏற்படுத்தப் பாதுகாப்புத் தரப்பினர் பணியாற்ற வேண்டும்." – என்றுள்ளது.

### 3 மாத...

தெல்லிப்பழை, பன்னாலை பகுதியைச் சேர்ந்த பங்கஜன் சிறீதிகன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி குழந்தைக்குக் கடந்த 24ஆம் திகதி காய்ச்சல், இருமல், சளி ஏற்பட்டது. அதற்குச் சிகிச்சை வழங்குவதாகப் பெற்றோர் குழந்தையைத் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

குழந்தைக்குச் சுவாசப் பிரச்சினை ஏற்பட்ட வேளை மேலதிக சிகிச்சைக்காக குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இருதய செயலிழப்பு காரணமாக குழந்தை உயிரிழந்தது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

### பொலிஸ் உத்தியோகத்தர்...

காயங்களுக்குள்ளானார்.

அவர் சிகிச்சைக்காக ஹபரனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹபரனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபரனை திருகோணமலை வீதியில் கல்ஓயா பொலிஸ் வீதித்தடைக்கு அருகில் நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த இடத்தில் பொலிஸார் வாகனச் சோதனைப் பணியில் ஈடுபட்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர், காரில் இருந்த பெண் மற்றும் 4 மாத குழந்தை, லொறியின் சாரதி ஆகியோர் காயமடைந்து ஹபரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகத் தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் ஹபரணை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட கல்ஓயா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 56 வயதான கந்தளாய், பதியாகம பிரதேசத்தில் வசித்து வந்த பொலிஸ் சார்ஜன்ட் என்பது தெரியவந்துள்ளது.

சடலம் பொலனறுவை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### பஸ்ஸின் சில்லு...

பஸ்ஸின் சாரதி பக்கச் சில்லின் அச்சு உடைந்து, சில்லு தீப்பிடிச்சுச் சென்றதில், அருகில் பயணித்த பட்டா வாகனத்தின் மீது சில்லு மோதியதில், பட்டா சாரதி நிலைகுலைந்து, பட்டாவும் விபத்துக்குள்ளாகியது.

பஸ் சாரதியின் சாமர்த்தியத்தால், பஸ் குடை சாயாமல் நிறுத்தப்பட்டு சேதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாரதத்தின் பாராமுகம்

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா இனிமேல் பேசாமல் விட்டால் அதனால் பெருமளவுக்கு மகிழ்ச் சியடையக்கூடிய ஒருவராகத் தானே இருப்பார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் எக்ஸ் சமூக ஊட கத்தில் பதிவு செய்திருக்கிறார்.

தங்களது பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆவது திருத்தத்தை பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

13 ஆவது திருத்தத்தைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டார்களா என்ற கேள்விக்கே இடமில்லாமல் அது தமிழர்கள் மீது திணிக்கப்பட்டதே என்பதுதான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு. அதனைத் தவறு என்றும் கூற முடியாது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படாத விவகாரமாக இழுத்தடிக் கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர்கள் தங்களுடைய நிலைப்பாட்டை தங்கள் வாக்குச் சீட்டுகள் மூலம் காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

அதன்படி -

இலங்கைத் தீவில் சுயநிர்ணய அடிப் படையிலான தனி இராஜ்ஜியம் ஒன்றை தங்களுக்காக அமைக்கின்ற தீர்மானத்துக்கு 1977 பொதுத் தேர்தலில் அவர்கள் அங் கீகாரம் வழங்கியிருந்தார்கள்.

1956 முதல் இன்று வரை அந்த நிலைப் பாட்டுக்கும் அதற்கு அப்பால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றுக்கும் அவர்கள் மாறாமல் தங்கள் வாக்குச்சீட்டுகள் மூலம் அங்கீகாரம் அளித்து வந்திருக்கி றார்கள்.

13 ஆவது திருத்தத்தின் கீழ் அறி முகப்படுத்தப்பட்ட மாகாண சபைக்கான தேர்தல்கள் இந்தியத் தலையீட்டினால் அவர்கள் மீது சுமத்தப்பட்ட சூழலில், அத்தகைய தேர்தல்களில் அவர்கள் பங்கு பற்றி வாக்களித்திருக்கின்றார்களே தவிர, அந்த மாகாண சபை முறைமையை அங்கீகரிக்கக் கோரும் விடயம் முன்வைக் கப்பட்ட எந்தத் தேர்தலிலும் அவர்கள் பங்கு பற்றியிருக்கவில்லை.

அதாவது, இலங்கைத் தமிழர்கள், ஜனநாயக ரீதியில் அங்கீகரிக்கப்படக்கூடிய ஒரு முறையில் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்று கூறுவதற் கான இடமே இல்லை. மாறாக, இந்திய அரசு இலங்கை மீது திணித்த அழுத்தத்தின் காரணமாக, அரைகுறை வேக்காடாக தமி ழர்கள் மீது வலிந்து சுமத்தப்பட்ட விட யமே 13 ஆவது திருத்தமும் அதன் மூலமான மாகாண சபை முறைமையுமாகும்.

அது அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட போது அது அரை குறைத் தீர்வு என்பதை அப்போதைய தமிழ்த் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் போன்றோர் கூட்டாக எழுத்தில், அந்தத் திட்டத்தை வலிந்து திணித்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் திட்டவட்டமாக தெரியப் படுத்தி வெளிப்படுத்தி இருந்தனர்.

கடந்த 36 ஆண்டுகளாக அது - அந்த 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலமான தீர்வு ஏற்பாடு - அதாவது மாகாணசபை முறைமை - அதில் பகிரப்பட்டவை எனக் கூறப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் ஒழுங் குகள் நடைமுறைக்கு வராமலும், வந்தவை சட்டரீதியாகத் தொடர்ந்து பிடுங்கப்பட்டு வந்தமையாலும் நலிந்து, குன்றி, சுருங்கி, செயலிழந்து போய் நிற்கின்றது.

அரைகுறை தீர்வாகிப்போன 13 ஆம் திருத்தம், நலிந்து, உருக்குலைந்து, கேடாகிப் போன நிலையில், இதுவரை அதைத் தன்னுடைய அரசியல், ராஜதந்திரத் தேவைகளுக்காக முன்நிறுத்தி வந்த இந் தியா, இப்போது, முன்னர் தான் இலங் கையுடன் செய்து கொண்ட சர்வதேச ஒப் பந்தத்தின் கீழான அந்த 13 ஆவது திருத்தத் தையும், அதன் மூலமான அதிகார பகிர் வையும், வாய்ச் சொல் அளவில் தன்னும் வலியுறுத்தக் கூடிய வலுவற்ற - கையா லாகாத - ராஜதந்திர நெருக்கடியில் சிக்கி, ஒரேடியாக அதனை மறந்து இருப்பது போல, அது விடயத்தில் மௌனம் சாதிக் கும் 'நாதாரித்தன' போக்குக்குச் சென்றி ருக்கின்றது.

இந்த நிலைப்பாடு, ஈழத் தமிழர்களுக்கு அவர்கள் ஒற்றுமைப்பட்டு வேறு நியாமான மாற்றுத் தீர்வு ஒன்றை நோக்கி அவர்கள் நகர்வதற்கு வாய்ப்புத் தரக் கூடியது - சாலச் சிறந்தது - என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டுவது ஒரு வகையில் சரியானதுதான். அர்த்தங்கள் பொதிந் ததுதான்.






# காத்தான்குடி பிரதேச வீதி அபிவிருத்தி பணிகள் தொடர்பில் நேரில் ஆராய்வு

காத்தான்குடி பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, காத்தான்குடி தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரான பிர்தௌஸ் நளீமியின் அழைப்பின் பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை காத்தான்குடிக்கு விஜயம் செய்தார்.

இதன்போது காத்தான்குடி நகர சபையின் செயலாளர் றிப்கா சபீன் அவர்களைச் சந்தித்து பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வீதி அபிவிருத்திப் பணிகள் குறித்துக் கலந்துரையாடினார்.

உலக வங்கியின் நிதி உதவியோடு கடந்த அரசால் ஆரம்பிக்கப்பட்ட வீதி அபிவிருத்திகள் தொடர்பாகவும், அது தொடர்பில் அப்பிரதேச மக்கள் முன் வைத்துள்ள, வீதியானது இருபக்க வடிகான்களைக் கொண்டதாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து புதிய காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாயல் வீதி மற்றும் புதிய காத்தான்குடி பெண்கள் சந்தை வீதி ஆகிய வீதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார். அத்துடன் பிரதேச மக்களுடனும் கலந்துரையாடினார்.

அண்மையில் இந்தப் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவை நேரில் சந்தித்து இந்த வீதி அபிவிருத்தி பணி தொடர்பில் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

இங்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இந்த விடயங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபை, உலக வங்கி பிரதிநிதிகள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு வரவுள்ளார் என்றும் மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, தரமான முறையில் இந்த வீதியை அபிவிருத்தி செய்வதைத் தாம் உறுதி செய்வார் என்றும் குறிப்பிட்டார்.

இந்த விஜயத்தில் தேசிய மக்கள் சக்தியின் காத்தான்குடி செயற்குழு உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# சமூக சேவைகளில் ஈடுபடும் பெண்கள் பாலியல் சீண்டலை எதிர்கொள்கின்றனர்

## ஆளுநர் முன் சுட்டிக்காட்டிய சமூக சேவகி கலைச்செல்வி

**(த.சுபேசன்)**

சமூக சேவையில் ஈடுபடும் பெண்கள் பெரும்பாலும் அரச உத்தியோகத்தர்களின் பாலியல் சீண்டல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட குடிசார் அமைப்பின் செயலாளரும் சமூக சேவையாளருமான சுந்தரலிங்கம் கலைச்செல்வி, வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் முன்பாக சுட்டிக்காட்டியிருந்தார்.



அண்மையில் கைதடியில் இடம் பெற்ற பால்நிலை சார்ந்த வன்முறைகளுக்கு எதிரான வடக்கு மாகாண நிகழ்வில் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் ஒரு சில அரச உத்தியோகத்தர்கள் சேவை பெற வரும் பெண்களிடம் பாலியல் லஞ்சம் கோரும் நிலை காணப்படுகிறது.

குறிப்பாகச் சமூக சேவையில் ஈடுபடும் பெண்கள் இவ்வாறான பாலியல் ரீதியாக சுரண்டல்களுக்கு அதிகம் முகம் கொடுக்கின்றனர்.

இதனால் அவ்வாறான பெண்கள் மன உளைச்சல்களுக்கு இலக்காகி சமூக சேவையை மேற்கொள்ளப் பின்னடிக்கும் நிலை காணப்படுகின்றது.

அத்தோடு பொதுப் போக்குவரத்தின் போதும் பெண்கள் அதிகமாகப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுகின்றனர்.

மேலும் வேலைவாய்ப்பு மற்றும் பட்டம், பதவி போன்ற ஆசை வார்த்தைகளைக் கூறி ஒரு சில முகவர்கள் பெண்களை இலக்கு வைத்துச் செயற்படுகின்றனர்.

பெரும்பாலான பெண்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில், பொதுப் போக்குவரத்தில் பாலியல் ரீதியான சுரண்டல்களுக்கு முகம் கொடுக்கின்ற போதிலும் அதனை அவர்கள் வெளிப்படுத்த தயங்குவதால் இவ்வாறான குற்றச்செயல்கள் அதிகரித்த நிலையில் காணப்படுகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசியலில் 50 சதவீதம் பெண்களுடைய பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டும். அத்தோடு மகளிருக்கான கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.- என்றார்.

# மோட்டார் சைக்கிள்களை திருடிய நால்வர் கைதாகினர்



தங்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று (26) அம்பலாந்தோட்டை, காலி, மாத்தறை மற்றும் சூரியவெவ பொலிஸ் பிரிவுகளில் 09 மோட்டார் சைக்கிள்களை திருடிய 04 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 38, 39, 52 மற்றும் 58 வயதுடையவர்கள் எனவும் சந்தேக நபர்கள் அம்பலாந்தோட்டை, ஹுங்கம பொலிஸ் பிரிவுகளில் பதிவாகியிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

இவர்களிடம் இருந்து 09 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அம்பலாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# 72 ஆயிரம் பேரின் குடி தண்ணீர் பிரச்சினை; தீர்மானம் எடுக்க நேரம் ஒதுக்க முடியாத நிலை!

## இப்படித் தெரிவிப்பது சிறுபிள்ளைத்தனம் என்று உதுமாலெப்பை எம்.பி. விசனம்

(கே. எ. ஹமீட் )

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்த மருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், அட்டப்பளம் போன்ற பிரதேசங்களில் வாழும் 72 ஆயிரம் மக்களுக்கான குடி தண்ணீர் தொடர்பான விடயங்களுக்கு தீர்வுகான வேண்டும் என்று சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் என்னால் முன்மொழியப்பட்டது.

இந்த நிலையில் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேரம் போதாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம் பாவா கூறியது சிறுபிள்ளைத் தனமான விடயமாகும்.

இவ்வாறு சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை விசனம் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் எ.ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான தாஹிர், ஏ.எம். மஞ்சுல ரத்னாயக்க, கே.கோடிஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர், அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. நௌஷாட் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த வருடமும் இந்த வருடமும் எமது மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் சம்மாந்துறை கொள்ளாவெளி வடிச்சல் பிரதான வாய்க்கால் உடைந்தது. இதனால் விவசாயிகளின் காணிகள் பாதிக்கப்பட்டன.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, அட்டப்பளம் பிரதேசங்களில் வாழும் 72 ஆயிரம் மக்கள் குடி தண்ணீர் இன்றி மிகவும் சிரமங்களை எதிர் கொண்டனர். இந்த வாய்க்காலைத் தற்காலிகமாக திருத்தியமைக்க நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உயர் அதிகாரிகளும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் இணைந்து செயறப்பட்டனர்.

எனவே, சம்மாந்துறை கொள்ளாவெளி பிரதான வாய்க்கால் உடைபடாது இருக்க நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கு ஏற்படும் தொடர்ச்சியான நஷ்டங்களுக்கும் 72 ஆயிரம் மக்களின் குடி தண்ணீர் பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வு காணலாம்.- என்றார்.

இது தொடர்பாக சம்மாந்துறை நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் கஜன் கருத்து தெரிவிக்கையில்,

நீர்வழங்கள் வடிகாலமைப்பு சபையின் பெரிய அளவிலான குழாய்கள் பிரதான வாய்க்கால்களில் பொருத்தப்பட்டிருப்பதால் வெள்ளம் ஏற்படும் போதும் பிரதான வாய்க்கால்கள் உடைந்து போகின்றன. எனவே நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபைக்கு உரிய பெரிய அளவிலான குழாய்கள் தனியாக பொருத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம கருத்து தெரிவிக்கையில்,

இது ஒரு முக்கியமான மக்களுடைய பிரச்சினையாக இருப்பதால் இது தொடர்பாக சம்மாந்துறை பிரதேச செயலாளர், சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியிலாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இதற்கான நில ஒதுக்கீட்டை அடையாளப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையின் பிரதான குழாய்களை பொருத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேரத்ன தலைமையில் விஷேட குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.ஹனிபா, நீர்ப்பாசன பொறியலாளர் கஜன், நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் ஹைதர் அலி ஆகியோர் இடம் பெறுகின்றனர்.







# கட்டாக்காலி மாடுகளின் தொல்லை திருகோணமலை நகரில் அதிகரிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர சபை பகுதிக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் கட்டாக்காளி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் போக்குவரத்துச் செய்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகர் பிரதான வீதியில் மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

நடுவீதியில் பல மாடுகள் நிற்பதால் போக்குவரத்து தடை செய்யப்படுகிறது. விபத்துச் சம்பவங்களும் ஏற்படுகின்றன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகளில் சேரும் குப்பை கழிவுகளை வீட்டின் முன்பாக வெளிப் பகுதியில் வைப்பதால் அவற்றை இந்த மாடுகள் அங்கும் இங்கும் இழுத்து வீதியை நாசமாக்குகின்றன என்றும் தெரிவிக்கின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்துமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# கல்முனை ஆதார வைத்தியசாலையின் பாதுகாப்புத் தொடர்பான அறிவுறுத்தல்!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையின் பாதுகாப்பு மற்றும் நோயாளிகள், பார்வையிடவரும் பொது மக்கள் தொடர்பான பாதுகாப்பு அறிவுறுத்தல் கூட்டம் வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் வைத்திய சாலையில் நடைபெற்றது.

அங்கு பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் கருத்துத் தெரிவிக்கையில்,

நோயாளிகள், பார்வையாளர்கள், உத்தியோகத்தர்களின் பாதுகாப்பும் வைத்தியசாலையின் பௌதீக வளங்களின் பாதுகாப்பும் ஒரு சிறப்பான மருத்துவ சேவையை உறுதிப்படுத்த இன்றியமையாதன.

அந்த வகையில் கல்முனை ஆதார வைத்தியசாலையின் பாதுகாப்பு தொடர்பாகவும் வைத்தியசாலை பாதுகாப்பு பிரிவினர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் இகவனம் செலத்த வேண்டும்.– என்றார்.

அவர்களின் செயற்பாடு சம்பந்தமான புதியதொரு செயன்முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

கலந்துரையாடலின்போது கடந்த காலங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாகவும் அப்படியொரு நிலைமையில் எவ்வாறு அவற்றைக் கையாள வேண்டும் என்பது பற்றியும் பேசப்பட்டன.

வைத்தியசாலை என்ற எண்ணமும் நோயாளிகளுக்கான சிறப்பான வைத்திய சிகிச்சைக்குப் பாதுகாப்புப் பிரிவும் முக்கியமானவை என்றும் இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது.




# சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் வீடமைப்புத் திட்டத்தை வழங்கக் கோரிக்கை

## அக்கரைப்பற்று பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு

**(எம்.ஏ.றமீஸ்)**

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் கீழ் வசித்து வரும் மக்களும் அம்பாறை மாவட்ட காணி உரிமைக் கான செயலணி அங்கத்தவர்களும் இணைந்து நேற்றுமுன்தினம் (25) மாலை அக்கரைப்பற்று பிரதேச செயலா ளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து இருபது ஆண்டுகளாகியும் தமக்கென நிர் மாணிக்கப்பட்ட நுரைச்சோலை சுனாமி வீடமைப்புத் திட்டம் கையளிக்கப்பட வில்லை. அதனைக் கைளிக்குமாறு கோரியே அக்கரைப்பற்று பிரதேச செய லாளர் ரீ.எம்.எம்.அன்சாரிடம் இந்த மகஜரைக் கையளித்தனர்.

இதன்போது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் தலைவர் பி.கைறுதீன் உள்ளிட்ட முக்கி யஸ்தர்கள் பிரதேச செயலகம் சென்று தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜ ரைப் பிரதேச செயலாளரிடம் கைய ளித்தனர்.

மகஜரைக் கையேற்ற பிரதேச செயலாளர் இதனை மாவட்ட செயலா ள ர், ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கவுள்ளார் என்றும் கடந்த இருபது வருடங்களாக சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் மக்களின் துயரைத் தான் நன்கு அறிவார் என்றும் இதன் போது குறிப்பிட்டார்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மருத்துவத்துக்கு உதவி வழங்கல்

வவுனியா மாவட்டம் ஆசிக்குளம் கிராமத் தை சேர்ந்த புற்று நோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு மருத்துவ செலவுக்காக 40 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த உதவி வழங் கப்பட்டது.


# நற்பிட்டிமுனைத் தமிழர் வரலாற்று சால்புகள் நூல் வெளியீடு நாளை

**(கஜனா)**

சஞ்சீவி சிவகுமார் எழுதிய 'நற்பிட்டிமுனைத் தமிழர் வரலாற்றுச் சால்புகள்' எனும் வரலாற்று நூலின் வெளியீட்டு விழா நாளை (28) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பின் வெளியீடாக இடம்பெறும் இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு அமைப்பின் தலைவர் க. ருத்திரமூர்த்தி தலைமை தாங்குகிறார்.

இவ்விழாவின் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக் களத்தில் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனும் சிறப்பு அதிதிகளாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் மற்றும் வரலாற்று ஆய்வாளர் கலாநிதி கவிக்கோ வெல்லவூர்க் கோபால் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.







# கிழக்கு மாகாண திணைக்களங்களுக்கு புதிய தலைவர்கள் இன்று நியமனம்!

**(நூருல் ஹுதா உமர், ஹஸ்பர் ஏ.எச்., அபு அலா)**

கிழக்கு மாகாண திணைக்களத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் புதிய தலைவர்களை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர இன்று (27) நியமித்து அவர்களுக்கான கடிதத்தையும் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண திணைக்களங்களில் தலைவர்களாக கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்குள் இருந்து இந்தப் பணியிடங்கள் மாற்றியமைத்து நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன.

அதற்கமைவாக, நிர்வாக பிரதிப் பிரதம செயலாளராக விமலரத்னம் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளராக என். சிவலிங்கம் , மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக ஏ.எல்.எம். அஸ்மி , கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்கள பணிப்பாளராக என்.மணிவண்ணன், கிழக்கு மாகாணக் காணி ஆணையாளராக வளர்மதி ரவீந்திரன், கிழக்கு மாகாண மேலதிக கல்வி பணிப்பாளராக ஐ.எம். றிக்காஸ், அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளராகஎன். எம். நௌபீஸ், மட்டக்களப்பு மாநகர சபை ஆணை யாளராகஎன். தனஞ்சயன், கல்முனை மாநகர சபை ஆணையாளராகஏ.ரீ.எம். ராபீ, ஆளணி மற்றும் பயிற்சி பிரிவு பணிப்பாளராகஎம்.ஆர். பாத்திமா ரிப்கா, மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளராகஎஸ்.பிரகாஷ், மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளராக யூ. சிவராஜா, மோட்டார் போக்குவரத்து ஆணையாளராகஎஸ். வருணி, மட்டக்களப்பு மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணை யாளராக வீ. தேவநேசன், கிராமிய அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளராக கே. இளம்குமுதன் ஆகியோர் நியமிக் கப்பட்டுள்ளனர்.










# அண்ணா பல்கலை சம்பவத்தை கண்டித்து அண்ணாமலை சாட்டையடி போராட்டம்






அண்ணா பல்கலை மாணவி துஷ்பிரயோகத்தைக் கண்டித்தும், தி.மு.க. அரசை கண்டித்தும் கோவையில் தனது வீட்டு முன்பு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தன்னைத் தானே சாட்டையால் அடித்து இன்று காலை போராட்டம் நடத்தினார்.

கோவை, காளப்பட்டி வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டின் முன் இன்று காலை 10 மணியளவில் தொண்டர்கள் முன்னிலையில் தன்னைத்தானே சாட்டையால் அடித்துக் கொண்டார்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை,

“இன்று நாங்கள் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டம் இன்னும் தீவிரமடையும். இது தனி நபருக்கு எதிரான போராட்டம் அல்ல. தமிழகத்தில் கல்வித் தரம் குறைந்துள்ளது. பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது. பொலிஸின் கைகள் கட்டப்பட்டுள்ளன. பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது. எனவே இந்தப் போராட்டத்தை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

எதற்காக 6 முறை சாட்டையடி என்று நீங்கள் கேட்கலாம். முருகப் பெருமானிடம் இந்த ஆறு சாட்டையடி மூலம் ஒரு வேண்டுதல் வைத்துள்ளோம். நம் தமிழ் மண்ணில் உடலை வருத்தி இறைவனிடம் வைக்கப்படும் வேண்டுதலுக்கு ஒரு விளைவு இருக்கும் என்பது நம்பிக்கை. நான் அந்த மரபையே பின்பற்றி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளேன். தெரிந்தோ தெரியாமலோ நாங்களே கூட ஏதேனும் தவறு செய்திருக்கலாம். அதற்குக் கூட இது தண்டனையாக இருக்கட்டும்.

நான் பொலிஸில் ஐ.பி.எஸ். அதிகாரியாக இருந்தபோது 10 ஆம் வகுப்பு மாணவி ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கி கொல்லப்பட்ட வழக்கை விசாரித்தேன். குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்தேன். அப்போது அந்தச் சிறுமியின் தாய் என்னிடம் “குற்றவாளியை பிடித்துவிட்டீர்கள், என் மகளைத் திருப்பித் தருவீர்களா?” எனக் கேள்வி கேட்டார். அந்தக் கேள்வி என்னை அரசியலில் பயணிக்க வைத்தது. எல்லோரையும் போல் ஒரு பிரச்சினை வரும் போது அதைப்பற்றி பேசிவிட்டு பின்னர் மறந்துவிட்டு அதன் பின்னர் அடுத்த பிரச்சினையைப் பேசும் அரசியல்வாதியாக என்னால் இருக்க முடியவில்லை. இந்தச் சம்பவம் என்னை வெகுவாக பாதித்துவிட்டது.

நான் நன்றாக யோசித்தே இந்த முடிவை எடுத்துள்ளேன். தி.மு.க. ஆட்சியிலிருந்து அகற்றப்படும் வரை காலணியை அணியப் போவதில்லை. இந்த ஆட்சி தவறு செய்கிறது. அறவழியில் போராடக் கூட அனுமதியில்லை. எல்லாவற்றையும் கண்டித்தே நாங்கள் போராட்டத்தை கையில் எடுத்துள்ளோம். நாங்கள் தவறுகளைக் கண்டித்து அரசியல் செய்கிறோம்.

அரசியலில் தேர்தல் வெற்றி, தோல்வி எல்லாம் பெரிய பொருட்டல்ல. 2026 தேர்தலில் தோற்றாலும் கூட நான் கவலைப்பட மாட்டேன். நான் சாராயம் விற்ற காசிலும், கமிஷன் காசிலும் தேர்தலை எதிர்கொள்ளவில்லை. மாறாக விவசாயத்தில் வந்த காசை வைத்து நேர்மையாக தேர்தலை எதிர்கொண்டேன்.

லண்டன் சென்று திரும்பியபின் என் அரசியல் பார்வை மாற்றம் பெற்றுள்ளது. மற்றபடி என்னைப் பற்றி சமூகவலைதளங்களில் விமர்சிப்பவர்கள் பற்றி எனக்குக் கவலையில்லை.” – என்றார்.

# இந்தியா தலைசிறந்த தலைவரை இழந்துவிட்டது; மன்மோகன் சிங் குறித்து பிரதமர் மோடி இரங்கல்



இந்தியா தனது தலைசிறந்த தலைவர்களில் ஒருவரை இழந்துவிட்டது என பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

“இந்தியா தனது தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான டாக்டர் மன்மோகன் சிங்கின் இழப்பிற்காக துக்கம் அனுசரிக்கிறது. எளிமையான சூழலில் இருந்து மேலே வந்து, மதிப்பிற்குரிய பொருளாதார நிபுணராக உயர்ந்தார். நிதியமைச்சர் உட்பட பல்வேறு அரசாங்க பதவிகளிலும் பணியாற்றினார். பல ஆண்டுகளாக நமது பொருளாதாரக் கொள்கையில் வலுவான முத்திரையை பதித்தார். நாடாளுமன்றத்தில் அவரது தலையீடுகளும் அற்புதமானவையாக இருந்தன. நமது பிரதமராக, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த விரிவான முயற்சிகளை மேற்கொண்டார்.

மன்மோகன் சிங் பிரதமராகவும், நான் குஜராத் முதல்வராகவும் இருந்த போது நானும் அவரும், தொடர்ந்து உரையாடியிருக்கிறோம். அரசாங்கம் தொடர்பான பல்வேறு விடயங்களில் நாங்கள் விரிவான விவாதங்களை நடத்துவோம். அவருடைய ஞானமும் பணிவும் எப்பொழுதும் வெளிப்படையானவை. துயரமான இந்த தருணத்தில், எனது மன்மோகன் சிங் குடும்பத்தினர், அவரது நண்பர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.




# நூலிழையில் உயிர் தப்பினார் டெட்ரோஸ் அதானோம்!

ஏமனின் தலைநகர் சனா சர்வதேச விமான நிலையத்தில் நேற்றையதினம் இஸ்ரேல் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் நூலிழையில் உயிர் தப்பியுள்ளார்.

பாலஸ்தீனம் மீது நடத்திவரும் தாக்குதலைக் கண்டித்து ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில் கைது செய்யப்பட்ட ஐ.நா ஊழியர்களை விடுவிப்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தவும், ஏமனில் சுகாதர மற்றும் மனிதாபிமான நிலைமையை மதிப்பிடுவதற்கும் சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் தலைமையிலான குழு ஏமன் சென்றது.

பணிகளை முடித்து நேற்றையதினம் சனாவில் மேற்படி குழுவினர் விமானம் ஏற இருந்தபோது அங்கு இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியிருந்தது.

இந்நிலையில், இந்த தாக்குதலில் சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் தலைமையிலான குழுவினர் நூலிழையில் உயிர் தப்பியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்க தேசிய பறவையாக வெண்தலை கழுகு அறிவிப்பு

அமெரிக்காவின் தேசிய பறவையாக வெண்தலை கழுகு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒப்புதல் அளித்து கையெழுத்திட்டுள்ளார்.

நத்தார் தினமான நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்த ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்காவின் கடந்த 250 வருடங்கள் கொண்ட வரலாற்றில் 'வெண்தலை கழுகு' மிக இன்றியமையாததாகும்.

1782ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவின் அரச இலட்சனைகளில் 'வெண்தலை கழுகு' பயன்படுத்தப்பட்டு வந்தாலும் தேசியப் பறவையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.



எவ்வாறாயினும், 1940ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தில் வெண்தலை கழுகை விற்பனை செய்வதோ அல்லது வேட்டையாடுவதோ சட்டவிரோதமானதென அறிவிக்கப்பட்டது.

அத்துடன், அமெரிக்காவின் உத்தியோகபூர்வ ஆவணங்கள், நாணயம், கொடிகள், இராணுவ சின்னம் உள்ளிட்ட பலவற்றில் இந்த வெண்தலை கழுகு இடம்பெற்றுள்ளது.

வட அமெரிக்காவில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த கழுகின் தலைப்பகுதி வெள்ளை நிறமாகும்.

வெண்தலை கழுகு அமெரிக்காவில் சக்தி மற்றும் வலிமையின் அடையாளமாக கருதப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவை உருவாக்கிய மூத்த தலைவர்களுள் ஒருவரான பெஞ்சமின் பிராங்கிளின், வெண்தலை கழுகுகள் மோசமான சில குணங்களை கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டி அதனை தேசிய பறவையாக அறிவிப்பதற்கு எதிர்ப்பை தெரிவித்தார்.

ஆனால், அவரின் இந்த கருத்தை ஏனைய தலைவர்கள் ஏற்றிருக்கவில்லை.

வலிமை, தைரியம், சுதந்திரம் மற்றும் அழியாத தன்மை ஆகியவற்றின் அடையாளமாக கழுகுகளை சுட்டிக்காட்டினாலும் இந்த வெண்தலை கழுகு வட அமெரிக்காவை மட்டுமே பூர்வீகமாக கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

கனடா முரசு

வியாழக்கிழமை 26/12/2024

**தட்டம்மை நோயாளர்கள் ஒன்றரியோவில் அதிகரிப்பு**

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை அதிக ரித்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

நியூ பிரவுன்ஸ்விக் பிராந்தி யத்திலும் அதிக அளவு 02

# கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ளும் கனடியர்கள்




கனடாவில் தபால் தொழிற் சங்க போராட்டம் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான கனடியர்கள் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதில் அசௌ கரிங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுவரையில் கடவுச்சீட்டு கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது. கனடியா தபால் பணியாளர் கள் நீண்ட போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந் தனர் என்பது குறிப்பிடத் தக்கது. 02



# ஸ்காப்ரோவில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒருவர் பலி

கனடாவின ஸ்காப்ரோ பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். வீடு ஒன்றில் இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வயோதிப ஆண் ஒருவர் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மேலும் இந்த வீட்டில் இருந்த மற்றுமொரு பெண் கடுமையான தீக் காயங்களுக்கு உள்ளான நிலை யில், வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

80 வயதான ஆண் உயிர் இழந்து விட்டார் எனவும் 79 வயதான பெண் ஆபத்தான நிலையில் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நத்தார் கொண்டாட்டங்களுக்காக வீட்டுக்கு விருந்தினராக சென்று இருந் தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.




# கனடிய டொலரின் பெறுமதி வீழ்ச்சி

கனடிய டொலர் தொடர்ச்சியாக வலுவிழந்து செல்வதாகத் தெரிவிக் கப்படுகின்றது. எதிர்வரும் சில மாதங் களில் டொலரின் பெறுமதி இவ்வாறு வீழ்ச்சியடையும் என தெரிவிக்கப்ப டுகின்றது.பொருளியல் நிபுணர்கள் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக அமெரிக்க டொலருக்கு நிகரான கனடிய டொலரின் பெறுமதி யில் இவ்வாறு வீழ்ச்சி பதிவாகியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செப்டம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது கனடிய டொலரின் பெறுமதி 4 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.



## தட்டம்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தட்டம்மை நோயாளர்கள் பதிவாகி உள்ளனர்.

இந்த மாத நடுப்பகுதி வரையில் நியூ பிரவுன்ஸ்விக் பிராந்தியத்தில் 37 தட்டம்மை நோயாளர்கள் பதிவா கியுள்ளனர்.

இதேவேளை, ஒன்றாரியோவில் சுமார் 10 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த ஒக்டோபர் மாதம் முதல் தட்டம்மை நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர் என தெரிவிக் கப்படுகிறது.

நியூ பிரவுன்ஸ்விக்கில் பதிவான நோயாளர்களில் அதிக எண்ணிக்கை யிலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பதின்ம வயது உடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தட்டமையின் நோயினால் பாதிக்கப் பட்டவர்களில் அனேகமானவர்கள் தட்டம்மை தடுப்பூசி ஏற்றுக் கொள் ளாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காய்ச்சல், செந்நிறத்திலான கண் கள் மற்றும் இருமல் போன்ற நோய் அறிகுறிகள் தென்படும் எனவும் தெரி விக்கப்படுகிறது.

பாடசாலைகளிலும் தட்டம்மை நோய் தடுப்பூசி ஏற்றப்படுவதாக தெரி விக்கப்படுகிறது.

## கடவுச்சீட்டுக்களை...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஸ்காடுனைச் சேர்ந்த மைக் போட் டேன் என்பவர் எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் திகதி மெக்சிகோ விற்கு குடும்பத்துடன் பயணம் செய்ய திட்டமிட்டுள்ளார்.

இதற்காக அவர் கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பம் செய்திருந்தார்.

கடவுச்சீட்டு 27 ஆம் திகதி கிடைக்க பெற வேண்டும் எனினும் இதுவரையில் கடவுச்சீட்டு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மெக்சிகோ பயணத்திற்காக தற்கா லிக அடிப்படையிலான பயண ஆவ ணங்களையேனும் பெற்றுக் கொள்ள முயற்சிக்கப் போவதாக அவர் தெரி விக்கின்றார். இவ்வாறு பெரும் எண் ணிக்கையிலான கனடியர்கள் கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ள முடியாது சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விதிமுறையில் மாற்றம்

கனடா குடியுரிமை விதிமுறையில் மாற்றம் செய்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

கனடாவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கு எக்ஸ்பிரஸ் என்ட்ரி என்ற நடைமுறை உள்ளது. எக்ஸ்பிரஸ் என்ட்ரி முறையில் கனடா குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது, ஒவ்வொருவருக்கும் அவர்களது கல்வி, வேலை உள்ளிட்டவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.அதிக மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும்.

கனடாவில் வேலை பார்ப்பதற்கான நிறுவனம் அளிக்கும் நியமன உத்தரவு கடிதத்துக்கு, 50 முதல் 200 புள்ளிகள் வரை கொடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கனடா குடியுரிமை விதிமுறையில் மாற்றம் செய்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி நியமன கடிதத்துக்கான மதிப்பெண்கள், இனி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஏற்கனவே விண்ணப்பித்துள்ளோர் மற்றும் காத்திருப்போருக்கு பொருந்தாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

போலி உத்தரவு கடி தங்கள் மூலம் பலர் விண்ணப்பிப்பதால், மோசடிகளை தடுக்க, பணி உத்தரவு கடிதங்களுக்கான மதிப்பெண்களை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# 70 ஆண்டுகளாக இயங்கி வந்த விமான நிலையம் மூடப்படுகின்றது

கனடாவில் சுமார் 70 ஆண்டுகள் இயங்கி வந்த விமான நிலையம் ஒன்று மூடப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

ஓடு பாதையுடன் கூடிய விமான நிலையமே இவ்வாறு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க - கனடிய இல்லை பகுதியில் இந்த விமான நிலையம் அமைந்துள்ளது. கடந்த 70 ஆண்டுகளாக இந்த விமான நிலையம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விமான நிலையம் அதிக அளவில் பயன்படுத்துவதில்லை எனவும் இதன் ஓடு பாதையை பராமரிப்பதற்காக அதிக அளவு செலவிட நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.இதனால், இந்த விமான நிலை யத்தை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான நிலையம் 1953 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.